செய்தி வெளியீடு எண்:1049 நாள்:28.11.2008

**நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட**
**6 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு 48 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை,**
**ஆட்சிமொழித் திட்டப் பொன்விழா கவிதைப் போட்டியில்**
**வெற்றி பெற்ற கவிஞர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை.**

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!

**சிறந்த தமிழறிஞர்களின் நூல்கள் பொதுமக்கள் அனைவரையும் சென்றடைதல் வேண்டும் என்னும் உணர்வோடு, அவர்தம் நூல்களை நாட்டுடைமையாக்கி, அவற்றைப் படைத்துள்ள சான்றோர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

**இத்திட்டத்தின்படி 2006–2007ஆம் ஆண்டில் 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு 1 கோடியே 23 இலட்ச ரூபாயும், 2007–2008ஆம் ஆண்டில் 19 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு 1 கோடியே 75 இலட்ச ரூபாயும் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.**

**அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டப் பேரவையில் 2008–2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், 27 தமிழறிஞர்களின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்படும் எனவும், அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப, சான்றாவணம் அளித்த 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.6.2008 அன்று மொத்தம் 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கினார்கள். மற்ற 6 தமிழறிஞர்களுள் மரபுரிமையர் சான்றாவணம் அளித்துள்ள சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆகியோரின் மரபுரிமையர்க்குத் தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்ச ரூபாய்; எழுத்தாளர் விந்தன், பேராசிரியர் ஆ. கார்மேகக்கோனார் ஆகியோரின் மரபுரிமையர்க்கு தலா 5 இலட்ச ரூபாய் வீதம் 10 இலட்ச ரூபாய்; 2006–2007 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டவாறு மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் மரபுரிமையர்க்கு 6 இலட்ச ரூபாய்; கடந்த 29.9.2008 அன்று, உவமைக்கவிஞர் சுரதா அவர்களின் சிலை திறப்பு விழாவின்போது பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது மரபுரிமையர்க்கு 12 இலட்ச ரூபாய் என மொத்தம் 48 இலட்ச ரூபாய்க்கான காசோலைகளை, அவரவர்களின் மரபுரிமையர்கள் 97 பேருக்கு இன்று (28.11.2008) முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.**